දුරකථන/தொலைபேசி இல./ Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832 Fax: 2784825

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 Fax: 2784846

ඊ-මේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ....................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்விஅமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල
"இசுருபாயா"
பத்தரமுல்ல
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED/01/21/04/04

දිනය / திகதி / Date } 2015.12. 31

சுற்று நிருபம்:- இல.- 35/2015

சகல மாகாணப் பிரதம செயலாளர்களுக்கும்
சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
சகல அதிபர்களுக்கும்

## பாடசாலைக்குள் ஆரோக்கியமான உணவகத்தை நடத்திச் செல்லல்

மேற்படி விடயம் தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட 2007/02 இலக்க 2007.01.10 திகதிய சுற்றுநிருபம் 2011/03 இலக்க 2011.01.18 திகதிய சுற்றுநிருபம் ஆகியவற்றுக்கு மேலதிகமாக இச் சுற்று நிருபம் இன்றிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

பாடசாலை மாணவர்களின் உடல், உளவிருத்தி மற்றும் அபிவிருத்தியில் ஆரோக்கியமும் போசாக்கும் இன்றியமையாதன. ஆயினும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட கற்கைகள் மாணவர்கள் பல்வேறு போசாக்கு குறைபாடுகளுடன் காணப்படுவதை வெளிக்காட்டியுள்ளன. இதற்குப் பிரதான காரணம் தவறான உணவுப்பழக்கமே என்று கூறலாம்.

ஆரோக்கியமான உணவு மாணவனின் கற்றல் செயற்பாடுகளில் அபரிமிதமான அபிவிருத்தியை ஏற்படுத்தும். ஆரோக்கியமான சத்துமிக்க உணவை உட்கொள்ளாமை காரணமாக கல்விச் செயற்பாடுகள் மந்தமாவதுடன் மெலிதல், குள்ளமாதல்,அதிக பருமன், கொழுப்பு போன்ற போசாக்குக் குறைபாட்டு நோய்களுக்கு முகங்கொடுப்பதுடன் இருதயநோய், நீரிழிவு, புற்றுநோய் போன்ற தொற்றா நோய்களின் தாக்கங்களோடு பற்களில் குறைபாடு போன்ற வேறு நோய்த் தாக்கங்களுக்கும் வழி வகுக்கும்.

சரியான உணவுப் பழக்கத்தை மேம்படுத்துவதற்கு உரிய அனுபவங்களைப் பாடசாலைச் சூழலில் ஏற்படுத்துவது மிகவும் பயனுள்ளதாகும். அதன்படி தற்போது உணவகத்தினுள் அதிகளவில் காணப்படுகின்ற உடன் உணவுகள், காபனேற்றப்பட்ட பானங்களுக்குப்

பதிலாக இலங்கை தேசிய போசாக்குக் கொள்கைக்கமைவாக ஒவ்வொரு நபருக்கும் சரியான போசணைத் தேவையை நிறைவு செய்யும் வகையில் அளவிலும் தரத்திலும் உரியவாறான உணவு கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

சரியான போசாக்குப் பழக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் அறிவூட்டம் செய்வதுடன் தாராளமாக உணவைப் பெற்றுத்தருதல், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் மலிவு விலையில் பெறக்கூடிய தன்மை என்பன உணவகத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் போசாக்கு குறைபாடுகளற்ற நோயற்ற மாணவ சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

இதன்படி 2016 ஜனவரி மாதம் ஆரம்பமாகும் புதிய தவணையுடன் பாடசாலைகளில் உணவகத்திற்குள் மற்றும் சூழலில் உணவு வழங்கப்படுதல் பின்வரும் நியதிகளுக்கு அமைவாக இடம்பெறவேண்டியது கட்டாயமாகும்.

1. பாடசாலை உணவகம் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் (SDS) மூலம் நடத்தல் அல்லது விலை மனுக் கோரல் மூலமாக ஒப்பந்தகாரர்கள் தெரிவு செய்யப்படுதல் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும் பாடசாலை உணவகத்தை நடாத்திச் செல்லுதல் மற்றும் பொறுப்புக்கூறல் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தையே சாரும்.

   a) 1980ம் ஆண்டின் 26ஆம் இலக்க உணவுச் சட்டத்திற்கமைவாகவும் 2003ஆம் ஆண்டின் 09ம் இலக்க நுகர்வுச் செயற்பாடுகள் தொடர்பான பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்திற்கமைவாகவும் சகல பாடசாலைகளும் மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவைப் பெறும் வசதிகள் மற்றும் போசாக்குள்ள உணவுகளைப் பெற்றுக் கொள்ளும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுவும் அதனை உறுதிப்படுத்துதலும்.

   b) உணவு தயாரிப்பவர், உணவு வழங்குமிடம், மற்றும் பயன்படுத்தும் பாத்திரங்களின் தூய்மை உறுதிப்படுத்தப்படல்.

   c) பாடசாலை உணவகத்தினுள் போசாக்கினை மேம்படுத்தத்தக்க சுகாதாரத்திற்கேற்ற ஆரோக்கியமான உணவுவகைகள் விற்பனை செய்யப்படுவதை ஊக்குவித்தல்.

   d) பாடசாலை உணவகத்தினுள் தடைசெய்யப்பட்ட அதிக எண்ணெய்,அதிக சீனி,அதிக உப்பு உள்ள உணவு வகைகளை விற்பனை செய்யாதிருத்தல்.

2. பாடசாலை உணவகத்தை நடத்திச்செல்லும் நடவடிக்கைகள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பூரண வகைகூறல் மற்றும் மேற்பார்வையின் கீழ் நலன்புரிச் சேவையாகக் கருதி மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. பாடசாலை உணவகத்தை நடத்துதல் தொடர்பிலான மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் உப குழு ஒன்று அமைக்கப்பட்டு பொறுப்பளிக்கப்படல் வேண்டும். அக்குழு **"பாடசாலை உணவுக் குழு"** எனப் பெயரிடப்படும். பாடசாலை உணவுக் குழு அதிபரது அல்லது அதிபரினால் பெயரிடப்படுகின்ற பிரதி அதிபரது தலைமையில் நடாத்தப்பட வேண்டியதோடு, அதன் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 06 தொடக்கம் 12 ற்கு இடைப்பட்டதாக அமைய வேண்டுமென்பதுடன், அதன் அங்கத்தவர்கள் பின்வருவோராய் இருத்தல் வேண்டும்.

   - அதிபர் / பிரதி அதிபர் (குழுத் தலைவர்)
   - பாடசாலை சுகாதார மேம்பாட்டுப் பொறுப்பாசிரியர்
   - வேறு ஆசிரியர் ஒருவர்
   - பாடசாலை அமைந்த பிரதேசத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்
   - பாடசாலை சிறுவர் சுகாதாரக் கழக அங்கத்தவர் ஒருவர்
   - சுற்றாடல் கழக உறுப்பினர் ஒருவர்
   - பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர்
   - பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர்
   - சிரேஸ்ட மாணவ தலைவன் /தலைவி அல்லது வேறு மாணவ தலைவன் /தலைவி
   - பாடசாலை நுகர்வோர் வட்டத்தின் உறுப்பினர் ஒருவர்

4. பாடசாலைக்குள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் உணவகம் நடத்தப்படின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வலயக்கல்விப் பணிப்பாளருடன் இது தொடர்பாக ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதுடன் அதன் பிரதி ஒன்றை உணவகத்தினுள்ளும் காட்சிப் படுத்த வேண்டும்.

5. உணவுப் பொருட்களின் விலையைத் தீர்மானித்தல் உணவுக்குழுவின் அனுமதியுடன் நடைபெறவேண்டும் என்பதுடன் சகாய விலையின் கீழ் உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் கட்டாயமாகும். விலை மாற்றங்களும் உணவுக்குழுவின் அனுமதியுடன மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் விலைப்படியல் உணவகத்தினுள் காட்சிப்படுத்தப்படவும் வேண்டும்.

6. பாடசாலை உணவுக்குழு மாதாந்தம் ஒன்று கூடுவதுடன் தவணைக்கு ஒரு முறை பாடசாலை உணவகம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்து கோட்டக்கல்வி பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளருக்கும் வலயக்கல்வி அலுவலக சுகாதார மேம்பாட்டுக் குழுவிற்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. பாடசாலை உணவகம் தொடர்பாகக் கண்காணிக்க வேண்டியது வலயக்கல்விப் பணிப்பாளரின் பொறுப்பாவதுடன் அது தொடர்பான பின்தொடராய்வு அறிக்கைகளைப் பாடசாலை உணவுக்குழுவிற்கு வழங்க வேண்டும். அதன்படி பாடசாலை உணவுக்குழுவினால் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது தொடர்பான உறுதிப்பாடுகள் வலயக்கல்விப் பணிப்பாளரால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

8. பாடசாலை உணவகம் என்பது பாடசாலைக்கு வருமானம் ஈட்டித் தரும் இடமாக மட்டுமன்றி மாணவர்களின் ஆரோக்கியம், போசாக்கு என்பவற்றை மேம்படுத்துவதற்கு உதவக் கூடிய வகையில் திட்டமிடப்பட வேண்டும். பாடசாலை உணவகத்தால் கிடைக்கும் வருமானம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கணக்கில் வைப்புச் செய்யப்பட வேண்டும்.

பாடசாலை சூழலுக்குள் சுகாதாரம் மற்றும் போசாக்கிற்கு உதவுகின்ற வகையிலான உணவு வழங்கப்படுகின்றது என்பது தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கை தவணைக்கு ஒரு முறையாவது பெற்றுக் கொள்ளப்படுவது பொருத்தமாகும்.

இது தொடர்பில் தேவையான வழிகாட்டல் “பாடசாலைக்குள் ஆரோக்கியமான உணவகத்தை நடத்திச் செல்லல் தொடர்பான கையேட்டில” உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் அதற்கமைவாகச் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் பாடசாலை மாணவர்களின் சுகாதாரம் மற்றும் போசாக்கு மட்டத்தினை மேம்படுத்தக்கூடிய வகையில் பாடசாலை உணவகங்கள் செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

டப்ளிவ். எம். பந்துசேன

செயலாளர்

கல்வி அமைச்சு

பிரதிகள்:
1. ஜனாதிபதி செயலாளர், ஜனாதிபதி செயலகம்
2. செயலாளர், சுகாதார அமைச்சு
3. கணக்காய்வாளர்
4. தலைவர், நுகர்வுச் செயற்பாடுகள் தொடர்பான அதிகார சபை
5. சகல மாவட்டச் செயலாளர்கள்
6. பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம்
7. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
8. பிரதம ஆணையாளர், கல்விக் கல்லூரிகள் கிளை
9. கல்வி அமைச்சின் சகல பதவி நிலை உத்தியோகத்தர்கள்

**......................ஆம் ஆண்டுக்கான பாடசாலை உணவகத்தை நடத்திச் செல்வதற்கான ஒப்பந்தம்.**

**ஒப்பந்தகாரர்களால் நடத்தப்படுவதாயின்**

........................... வித்தியாலய உணவகத்தைக் குத்தகைக்கு விடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட கேள்விச் சபையின்................................................ ம் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவிற்கமையவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தீர்மானத்திற்கமையவும் ............................வித்தியாலய அதிபர் குத்தகைக்கு வழங்குபவர் என்ற அடிப்படையில் முதல் கட்சிக்காரர் ஆகவும் ..................................................... ஐச் சேர்ந்த திரு................................குத்தகைக்குப் பெறுபவர் என்ற அடிப்படையில் இரண்டாம் கட்சிக்காரர் ஆகவும் கீழ்வரும் நிபந்தனைகள் விதிகளுக்கமைவாக இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**பாடசாலைஅபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்படுவதாயின்**

............ம் திகதி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தீர்மானத்துக்கமைய...................வலயக் கல்விப் பணிப்பாளர் குத்தகைக்கு வழங்குபவர் என்ற அடிப்படையில் முதல் கட்சிக்காரர் ஆகவும் ......................வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் குத்தகைக்குப் பெறுபவர் என்ற அடிப்படையில் இரண்டாம் கட்சிக்காரர் ஆகவும் கீழ்வரும் நிபந்தனைகள் விதிகளுக்கமைவாக இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1 ............................ இலக்க சுற்று நிருபத்திற்கமையவும் சுகாதார அமைச்சின் சட்டத்திற்கமைவாகவும் உணவகத்தை நடத்திச் செல்ல வேண்டும்.

2. இந்த ஒப்பந்தம் குறித்த ஆண்டின் டிசம்பர் 31ம் திகதிவரை மட்டுமே செல்லுபடியாகும்.

3. பாடசாலை உணவுக் குழுவின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் செயற்படவேண்டும்

4. உணவு, பானங்களின் விலைப் பெறுமதிகளுக்காக பாடசாலைஉணவுக் குழுவின் அனுமதி பெறப்பட்டிருப்பதுடன் உணவகத்தில் விலைப்பட்டியல் காட்சிப் படுத்தப்பட்டிருக்க வேண்டும்.



| உணவின் வகை | அளவு | விலை ரூபா |
|---|---|---|
| | | |

5. உணவகத்தை நடத்திச் செல்வதற்கான ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், பாடசாலை உணவக ஊழியர்களின் சம்பளம் மின்சாரப் பட்டியல் போன்ற கொடுப்பனவுகள் உணவக வருமானத்தில் செலுத்தப்பட வேண்டும்

6. பாடசாலை உணவகத்தை சுகாதார முறையின் கீழ் நடத்திச் செல்லும் பொருட்டு பயன்படுத்தப்படும் உணவகத்தின் சகலபாத்திரங்களும் உணவகத்தின சுற்றுச் சூழலும் எப்போதும் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் பேணப்பட வேண்டும்

7. பாடசாலை உணவக ஊழியர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டிருப்பதுடன் அதை அவர்கள் எந்நேரமும் அணிந்திருக்க வேண்டும்

8. பாடசாலை உணவக ஊழியர்கள் அநாவசியமாகப் பாடசாலை வளாகத்தினுள் சுற்றித் திரியக்கூடாது

9. பாடசாலை உணவக ஊழியர்கள் எப்போதும் தூய்மையான பூரணமான ஆடை அணிவதுடன் பாடசாலை விதிகளையும் கடைப்பிடிக்க வேண்டும்

10. பெண்கள் கல்விகற்கும் பாடசாலையாயின் ஊழியர்கள் மத்தியில் குறைந்தது ஒரு பெண் ஊழியராவது இருக்க வேண்டும்

11. அதிபரின் அனுமதியின்றி பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் உணவகத்தில் தங்கியிருக்கக் கூடாது.

12.அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலை நாட்களில் மணிவரை உணவகம் திறந்தருக்கவேண்டிய நேரம் காலை 7.00 மணிமுதல் பி.ப.2.30 மணிவரை என்பதுடன் பாடசாலையின் தேவைக்கேற்ப மேலதிக நேரம் திறந்திருப்பதாயின் அதிபர்/ வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் தீர்மானிக்க இயலும்.

13.விசேட சந்தர்ப்பங்கள், விடுமுறை தினங்களில் உணவகம் திறந்திருக்க வேண்டியதுடன் பாடசாலையின் தேவைக்கேற்ப மேலதிக நேரம் திறந்திருப்பதை அதிபர்/ வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் தீர்மானிக்கலாம்.

14.உணவுப் பொருட்களுக்கு மேலதிகமாக வேறு பொருட்களை உணவகத்தில் விற்பது பாடசாலை உணவுக் குழுவின் அனுமதியின்படி மாத்திரமேயாகும்.

15.சுற்று நிருப இல 35/2015 இற்கமைவாக போதியளவிலும் தரமானதுமான உணவுகள் வழங்கப்பட வேண்டும்.

16.பாடசாலையின் எப்பொருளையும் எச்சந்தர்ப்பத்திலும் அதிபரின் எழுத்துமூல அனுமதியின்றி வெளியே எடுத்தச் செல்லக் கூடாது.

17.பாடசாலை உணவகத்தை நடாத்திச் செல்லல் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பூரண பொறுப்புக்கூறல் மற்றும் மேற்பார்வையின் கீழ் நடத்தப்பட வேண்டும்.

மேலும் மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு மேலதிகமாக பாடசாலை உணவக ஒப்பந்தப் பத்திரம் வழங்கப்படும் போது அந்த இணைப்பிலுள்ள சகல நிபந்தனைகள் விதிகளையும் மீறாமல் நடந்துகொள்வதாக 2ம் கட்சிக் காரர் இணங்குகிறார்.

| | |
|---|---|
| <u>முதல் கட்சிக் காரர்</u> | <u>இரண்டாம் கட்சிக் காரர்</u> |
| குத்தகைக்குக் கொடுப்பவர் | குத்தகைக்குப் பெறுபவர் |
| ........................ | ........................ |
| தேசிய அடையாள அட்டை இல | தேசிய அடையாள அட்டை இல |
| வலயக் கல்விப் பணிப்பாளர்/ அதிபர் | |
| சாட்சி 1.பெயர்..................... | 2. பெயர்.............................. |
| கையொப்பம்....................... | கையொப்பம்.......................... |
| தேசிய அ. அ. இல............ | தேசிய அ. அ. இல................ |